# சான்றாளரின் சாட்சிய வாக்குமூலம்
## (DEPOSITION OF WITNESS)

மேற்கோள்:– 1. குற்றவியல் நடைமுறை விதிகளின் 42–ஆம் விதி, 53–ஆம் நீதிமன்ற படிவம்
(Rule 42 and Judicial from No. 53 of Criminal Rules of Practice)
2. குற்றவியல் நடைமுறை தொகுப்பு சட்டத்தின் XXIII–ஆம் அத்தியாயம்
(Chapter XXIII Code of Criminal Procedure)

## மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்
(IN THE COURT
OF THE III–ADDITIONAL DISTRICT SESSIONS JUDGE, SALEM).

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :– | **S.C.No.117/2017** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளரின் வரிசை எண்** | :– | **அ.சா– 08 ( PW– 08 )** |
| **பெயர்** | :– | **சப்னா** |
| **கணவரின்/தகப்பனாரின் பெயர்** | :– | **மணி (எ) இளமுருகன்** |
| **ஊர்** | :– | |
| **வருவாய் வட்டம்** | :– | |
| **சமூகம் (சாதி)** | :– | |
| **தொழில்** | :– | |
| **மதம்/சமயம்** | :– | |
| **வயது** | :– | |

**2026–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாள் 1969–ஆம் ஆண்டில் ஆணையுறுதிச் சட்டத்தின் (நடுவன் சட்டம் 44/1969) வகையங்களுக்கு இணங்க சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படடது.**

**சான்றாளரின் கையொப்பம்**

எதிரி தோன்றினார். எதிரியின் வழக்குரைஞர் தோன்றினார்.

**முதல்விசாரணை:-**

நான் தருமபுரி, அழகாபுரியில் வசிக்கிறேன். இந்த வழக்குச் சம்பத்தில் இறந்துபோன மணி என்கிற இளமுருகன் என் கணவர். நான் 12-ஆம் வகுப்பு படித்துள்ளேன்.

நீதிமன்றத்தில் தோன்றியுள்ள எதிரியை எனக்குத் தெரியாது. 25.04.2014-ஆம் தேதியன்று வழக்கம்போல் இளமுருகன் காலையில் புறப்பட்டார். Car சம்மந்தமாக செல்வதாக சொன்னார். இரவு சுமார் 08.00 மணியளவில் என்னுடைய சித்தப்பா மணிவண்ணன் என்னை கைப்பேசியில் அழைத்து இளமுருகன் வீட்டில் உள்ளாரா என்று கேட்டார். காலையில் சென்றவர் இதுவரை வரவில்லை என்று சொன்னேன். உறவினர் ஒருவர் வந்து இளமுருகன் விபத்தில் இறந்ததாக சொன்னார். காலையில் தான் இளமுருகனை கொன்றுவிட்டார்கள் என்று எனக்குத் தெரியவந்தது. அதிர்ச்சியில் எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. என்னை காவல் துறையினர் விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க பிறழ் சான்றாளராக பாவிக்கப்பட்டார். விடைபொதி வினாக்கள் கேட்க அனுமதி வழங்கப்பட்டது.**

என் கணவர் இளமுருகன் சம்பவதன்று காலை 09.00 மணிக்கு வெளியே போனார் மதியம் சாப்பிட்டுவிட்டு மெய்யனூர் சாலை பட்டறையில் உள்ள Shift Car- யை விலை பேச வேண்டியுள்ளது என்றும் மாலை 04.00 மணியளவில் வீட்டைவிட்டு கிளம்பி சென்றார் என்றும் இரவு சுமார் 07.00 மணி அழைப்பு வந்தது என்றும் மெய்யனூர் பட்டறைமுன் வைத்து என் கணவரை மர்ம நபர்கள் வெட்டி கொலை செய்துவிட்டார்கள் என்றும் நான் மேற்படி இரவில் வந்து பார்த்தபோது ஜென் பட்டறையின்

முன்னால் என் கணவர் தலை, கை மற்றும் கழுத்து ஆகிய இடங்களில் வெட்டு காயங்களுடன் இடது கை மணிக்கட்டு கீழ் பகுதியில் வெட்டுண்டான நிலையில் தலை உட்பட இரத்துடன் இருந்தார் என்றும் புலனாய்வின்போது சொல்லிட்டு தற்போது பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

இல்லை.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.